பாடம் 5

# தேவனுடைய விசேஷித்த பரிசு

***உனது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கான ஆயத்தங்களை எப்போதிருந்தே செய்ய ஆயத்தமாகிவிடுவாய்? விசேஷித்த நாட்கள், விசேஷித்த உடைகள், விசேஷித்த உணவு என்றெல்லாம் நாம் வைத்திருக்கிறோம். ஆனால், நமக்கென தேவன் தந்துள்ள விசேஷித்த பரிசுத்த நாளைப்பற்றிப் பார்ப்போமா?***

வில்சன் தன் அறையில் உட்கார்ந்திருந்தான். தனக்குப் பரிசாக வந்த பரிசுப்பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது உள்ளே வந்த அம்மாவிடம் “இது மாமா கொடுத்தது; இது அத்தை எனக்குப் பரிசாகக் கொடுத்தது; இது நீங்கள் கொடுத்தது” என்று மகிழ்ச்சியுடன் ஒவ்வொரு பரிசுப்பொருளையும் காண்பித்தவாறு சொன்னாள்.

அம்மா அவனிடம், “இவை யாவையும்விட, மிகச் சிறப்பான ஒரு விசேஷித்த பரிசை தேவன் உனக்குக் கொடுத்துள்ளாரே. இந்தப் பரிசுகள் எல்லாம் வருடத்திற்கு ஒருமுறை உனது பிறந்தநாளின் போதுதான் கிடைக்கும். ஆனால், தேவனோ ஒவ்வொரு வாரமும் உனக்கு அந்தப் பரிசைத் தருகிறார். அது என்ன பரிசு?” என்று வில்சனிடம் கேட்டார்கள். வில்சன் பதில் சொல்லாமல் அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“என்ன வில்சன்! அப்படிப் பார்க்கிறாய்? அதுதான் ஓய்வுநாள். ஒவ்வொரு வாரமும் ஓய்வுநாளை தேவன் நமக்கு இனிய பரிசாகக் கொடுத்துள்ளார்; அந்த ஓய்வுநாள் நமக்கு இளைப்பாறுதலைத் தரும் இன்பமான நாள் என்றபோது, வில்சனுக்கும் ஏதோ புரிந்ததுபோல் இருந்தது. மெதுவாக ‘ஆம்’ என்று தன் தலையை அசைத்தான்.

ஓய்வு நாளைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? தெரிந்ததைச்



## மனன வசனம்

**தேவன் ஏழாம்நாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினார்.**

**ஆதியாகமம் 2:3.**

சொல் பார்ப்போம்'' என அம்மா கேட்டார்கள். தேவன் சொல்லியிருந்த ஓய்வுநாளைப் பற்றிய வசனம் வில்சனின் நினைவிற்கு வந்தது. உடனே துள்ளிக்குதித்தவனாய், ''ஓய்வு நாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியை களையெல்லாம் நடப்பிப்பா யாக...'' என்று சொல்லிக் கொண்டிருந்தபோது, அம்மா போதும் என்று கூறி அவளை அணைத்துக்கொண்டார்கள்.

மிகவும் சரியாக அழகாகச் சொல்கிறாய் என்று சந்தோஷப் பட்டார்கள். மேலும் அவனிடம், ''தேவன் இந்த ஓய்வுநாளை மனிதனுக்காகவே உண்டாக்கி னார். தேவன் அன்று ஆதா மிடம், நிலத்தைப் பண்படுத்து என்றாரே. அந்த வேலை நமக் கும்தான். தேவன் படைத்த இந்தப் பூமியை நாம் கெடுக்கக்



கூடாது. இதை மேலும் அழகா கவும், மனிதர்களுக்குப் பயனளிக்கும் வகையிலும் இவ் வுலகில் செயல்படவேண்டும். ஆறு நாளும் நன்கு உழைக்க வேண்டும். இப்போது நீ சிறிய பிள்ளை. உனக்கான வேலை என்னவெனில் நன்கு படித்து முழுமதிப்பெண்கள் பெறுவதே. அவ்விதம் ஆறுநாளும் சோம் பல் இன்றி வேலை செய்பவர்க் குத்தான் ஓய்வுநாள் ஆசீர்வாத மும் சந்தோஷமுமான நாளாக இருக்கும்.

''ஓய்வுநாளை வேதம், மனமகிழ்ச்சியின் நாள் என்று அழைக்கிறது. இந்த மனமகிழ்ச்சி நாளில் ஆலயம் சென்று நாம் தேவனை மனதாரப் போற்ற லாம்; தேவனுடைய அன்பை யும், சத்தியத்தையும் அதிகம் அறிந்துகொள்ளலாம். தேவைப்பட்டோர், சிறைப்பட் டோர், உதவியற்றோர், சுகமற் றோருக்கும் உதவலாம். வேதா கமத்தை அதிக நேரம் ஆராய லாம். அன்றைக்கு நம்முடைய சொந்த வேலைகளையெல் லாம் நாம் ஒதுக்கிவிட்டு, தேவனோடு மகிழ்ந்து உறவாட லாம்'' என்றார்கள்.

## செய்தி

**தேவனது வாரப்பரிசாகிய ஓய்வுநாளில் களிகூரும்போது தேவனைத் தொழுகிறேன்.**

"அப்படியானால், இந்த ஓய்வு நாள் உண்மையாகவே தேவன் நமக்குத் தந்த விசேஷித்த பரிசு" என்று வில்சன் துள்ளிக் கொண்டே சொன்னான். அவன் ஆசைப்பட்டபடியே வரப்போகிற ஓய்வுநாளுக்கு அவனது தாத்தாவும் பாட்டியும் அழைக்கப்பட்டார்கள். மேலும், ஒவ்வொரு வாரமும் ஓய்வு நாளை ஒரு பண்டிகை நாள் போன்று கொண்டாட முடிவு செய்தனர். இனி ஒவ்வாரு ஓய்வுநாளும் வில்சனுக்குப் பரபரப்பும், புத்துணர்ச்சியும் மகிழ்ச்சியுமிக்க நாள்தான்!

என் கண்ணே! இந்த இனிய ஓய்வுநாளில் அனைத்து ஆசீர்வாதங்களும் உண்டாகட்டும். மனமகிழ்ச்சியின் நாளாகிய ஓய்வுநாளில் மனமார தேவனைப் போற்று.

**செய்முறை: வட்டங்களில் உள்ள எழுத்துகளை அடித்து விடு. மற்ற கட்டங்களினுள் இருக்கும் எழுத்துகளைச் சேர்த்து, அங்கே கொடுக்கப்பட்டுள்ள மேலான செய்தியை கோடுகளில் எழுது.**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க | ஓ | வ | ய் | அ | வு | ம | நா |
| ல | ளை | ஐ | ம | க | கி | ர | ழ் |
| ஸ | ச் | இ | சி | உ | யா | எ | ய் |
| ப | ஆ | ண் | ச | டா | ரி. | டு | அ |
| ம | ந் | ன | நா | ம | ளி | வ | ல் |
| கி | க | ச | ளி | ட | கூ | ழ் | ரு. |



____________________

____________________